ஆசிரியர்கள் பட்டப் படிப்பு படித்துத் தேறியவுடன், அங்கே கல்வியை ஊக்குவிப்பதற்கு, முன்னேற்றத்திற்கு அவர்களுக்கு பட்டதாரி ஆசிரியர்கள் சம்பளத்தைக் கொடுத்து, அந்த வகுப்புகளிலேயே போதிக்க அவர்களைப் பயன்படுத்துமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தப் பிரச்சினை பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. அவர்கள் பி.ஏ., பி.டி. தகுதியுள்ளவர்களாகிவிட்டார்களானல், ஒவ்வொரு பள்ளியிலும் பி.டி. ஆசிரியர்களை நியமிக்கும்போது, முதற் சலுகை இவர்களுக்குத் தர பரிசீலிக்கலாம். இப்போது அதிகமாகப் படித்து பி.ஏ., பி.டி. தகுதியுடையவர்களாக ஆகும் சூழ்நிலை இருப்பதால், அதைக் கவனிக்கலாமென்று பரிசீலிக்கப்படுகிறது.

THIRU A. R. DAMODARAN : Sir, if the number of years is going to be taken into account to declare Second Grade Tamil Pandits as First Grade Tamil Pandits, the same plea may be put forward by Higher Grade Teachers as well as Secondary Grade Teachers. Are the Government aware of the full implications of accepting this proposal?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இனிமேல் பத்தாவது படிக்காமல் யாரையும் புலவர் வகுப்புக்கோ அல்லது மற்றவைகளுக்கோ சேர்க்கக்கூடாதென்ற முறையை ஏற்படுத்திவிட்டு, ஏற்கெனவே அந்த நிலையில் இருக்கின்ற 300 அல்லது 400 பேர்களைத் தொடர்ந்து அனுமதிப்பது நல்லதல்ல. அப்படி அனுமதிப்பதற்கான விதியை நாம் கொண்டுவர முடியாது. இப்போது 300, 400 பேர்கள்தான் இருக்கிறார்கள். ஆகவே, இவர்கள் நீண்ட காலத்திற்கு முன்னல் வந்தவர்கள் என்பதற்காக, தனிச் சலுகைகள் அளிக்கலாமேயொழிய, அதற்கு நிலையான விதியாக அமைக்க இயலாது.

Selection Grade Posts

* 297 *Q.*—THIRUVALARGAL V. ISVARMURTI, S. MUTHUSWAMY AND M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state :

(*a*) whether the service of the Secondary Grade Teachers under different managements is taken into account for the purpose of Selection Grade ; and

(*b*) if so, the details thereof ?

[1973 மார்ச் 29

தேர்வுநிலைப் பதவிகள்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி, திரு. செ. முத்துசாமி & திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விணுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) பல்வேறு நிர்வாகங்களின் கீழுள்ள பள்ளிகளில் பணி புரியும் இடைநிலைத் தர ஆசிரியர்களின் பணிநிலை, தேர்வுத் தரப் பதவிக்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) : ஆசிரியர்களுக்கு தேர்வுநிலைப் பதவிகள் கொடுப்பதற்கு ஊதிய உயர்வுக்கு (increments) தகுதி உள்ள பணிக்காலம் முழுவதும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, இந்த ஆசிரியர்கள் வெவ்வேறு மேனேஜ்மென்டில் வேலை பார்த்திருந்தாலும், முழு ஊதியக் காலமும் எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று எல்லா உத்தியோகஸ்தர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறதா வென்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். சென்னை மாநகரிலே, ஒரு ஆண்டு கார்ப்பரேஷன் பள்ளியில் பணியாற்றியவர் என்பதற்காக, முன்பிருந்த 10 ஆண்டுகளைத் தள்ளிவிட்டு, பிரைவேட் ஸ்கூலில் இருந்த பணிக் காலத்தைத்தான் எடுத்துக்கொள்கிறார்கள். செலக்ஷன் கிரேடுக்கு முழுப் பணிக் காலத்தையும், எந்த நிர்வாகத் தின்கீழ் அவர்கள் வேலை பார்த்தாலும் எடுத்துக்கொள்ள வேண்டு மென்று, திட்டவட்டமான ஒரு ஆணை அனுப்பப்பட்டிருக்கிறதா வென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, The entire service rendered by the teachers which counts for increment is taken into account for the purpose of selection grade என்று "என்டைர் சர்வீஸ்"-ஐயும் எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற முறையில்தான் இருக்கிறது. தகுதியுள்ள பணிக்காலம் முழுவதும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, ஒரு மாவட்டத்தி லிருந்து இன்னொரு மாவட்டத்திற்குச் சென்ற ஆசிரியர்களது பணிக் காலம்—முந்திய மாவட்டத்தில் ஆற்றிய பணிக்காலம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படாமல், அவர்களுக்குத் தேர்வு நிலை வழங்கப்

1973 மார்ச் 29]

படவில்லை. எனவே அதற்காக, ஒரு விளக்கமான உத்தரவை அனுப்ப அரசு ஏற்பாடு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தனிப்பட்டவர்கள் கோரிக்கைகளை அனுப்பிவைத்தால், முறைப்படி அதிகாரிகளால் கவனிக்கப்படும்.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே, தொடக்கப்பள்ளியிலிருந்து, உயர்நிலைப் பள்ளியாக மாற்றும்போது, அங்கு பணியாற்றும் ஆசிரியர்கள் உயர்நிலைப் பள்ளிக்கு ஆசிரியர்களாகச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் தொடர்ந்து ஊதிய உயர்வு பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஊதிய உயர்வு சர்வீசுக்கு எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கிற நிலை இருக்கிறது. அதேபோல, ஒரு பஞ்சாயத்து யூனியனிலிருந்து, இன்னொரு பஞ்சாயத்து யூனியனுக்கு வரும்போது, இந்தப் பஞ்சாயத்து யூனியனில் ஆற்றும் பணிக் காலத்தை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பலவிதமான வரைமுறைகளை வைத்திருக்கிறார்கள். தொடக்கப் பள்ளியிலிருந்து உயர்நிலைப் பள்ளிக்கு வரும்போது, ஆண்டுக்காண்டு தொடர்ந்து ஊதிய உயர்வு பெறுகிறார்கள்; பஞ்சாயத்து யூனியனிலிருந்து இன்னொரு பஞ்சாயத்து யூனியனுக்கு வரும்போதும், அந்த ஊதிய உயர்வு பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த ஆசிரியர்களுக்கு இன்னும் செலக்ஷன் கிரேடு கொடுக்கப்படவில்லை.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : துணைக் கேள்விகள் சுருக்கமாக இருக்க வேண்டும். லெக்சர் பண்ணிக்கொண்டிருந்தால் எப்படி? லெக்சர் பண்ணுகிற மாதிரி இருக்கக்கூடாது. துணைக் கேள்விகள் கேட்கலாம்; சுருக்கமாகக் கேட்க வேண்டும். 5 நிமிடங்கள் சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது.

திரு. செ. முத்துசாமி : தலைவரவர்களே கோபித்துக்கொண்டால் நாங்கள் என்ன பண்ணுவது?

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : சுருக்கமாக இருக்க வேண்டும்

திரு. செ. முத்துசாமி : அந்த சர்வீசை கணக்கில் எடுத்துக் கொள்வதற்கு உத்தரவு அனுப்பப்படவில்லை. அது பொதுக் காரியமாக இருக்கிறபடியால், அந்த ஆணையை உடன் அனுப்புவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, விடையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படிப்பட்ட ஆணைகள் பிறப்பிக்கப்படாமல் இருந்தால், பிறப்பிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

* 298 *Q.*—THIRU S. MUTHUSWAMY : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether Selection Grade has not been given to teachers of " B-Wing " in High Schools which are under the control of Chief Educational Officers in Salem and Dharmapuri Districts; and

(*b*) if so, the reason therefor ?

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு கல்வி—உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சேலம், தருமபுரி மாவட்டங்களில் முதன்மைக் கல்வி அலுவலரின் கீழ் உள்ள உயர்நிலைப் பள்ளிகளில், "பி" பிரிவில் (B-Wing) பணியாற்றும் ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேடு வழங்கப்படாமல் உள்ளதா?

(இ) ஆமெனில் ,அதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) சேலம், தருமபுரி மாவட்டங்களிலுள்ள அரசு (கழக) உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் பணி மூப்பு பட்டியல் வருவாய்த் துறை மாவட்ட வாரியாக வரிசைப்படுத்தப்பட்டு, தேர்வுநிலை அளிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி சென்னை உயர்நீதிமன்றம் ஆணையிட்டு இருக்கிறது. அதனால் தேர்வுநிலை பதவிகள் வழங்க முடியவில்லை.

Salary of Teachers

* 299 *Q.*—THIRU M. RAJAH IYER : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of Headmasters and Graduate Assistants in Government (B) High Schools in the Ramanathapuram District, who get a lower salary than their juniors after the revised fixation of salaries according to the recommendations of the Second Pay Commission ; and

(*b*) if so, the reasons therefor?